**சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: முனைவர்.இரா.முருகன், எம்.எஸ்.சி.,பி.எட்.,எம்.பில்.,பி.எச்.டி.,**

**ந.க.எண்.018151/ ஆ2/2018 நாள். 18 .02.2022.**

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வித்துறை – கருணை அடிப்படையில் நியமனம் – சேலம் மாவட்டம், எருமாபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 10.05.2006 அன்று பணிக்காலத்தில் காலமான திரு.ஆ.ராசன் என்பவரின் வாரிசுதாரர் திரு.ரா.கிரிதரன் என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளரராக பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 02.09.2016 முற்பகல் அன்று பணியில் சேர்ந்துள்ளது – இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை:
1.அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி (வரவு செலவு–1)த் துறை நாள்.18.05.2018.
2.அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021.
3. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.70588 / ஜே / இ4 / 2018 , நாள் 10.11.2018.
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.21925 / ஜே/இ4 / 2021. நாள்.09.04.2021.
5.சேலம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 2870/அ1/2016, நாள்.31.08.2016.
6. ஆத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.419/அ1/2018, நாள்.10.10.2018.
7. ஆத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.495/அ1/2020, நாள்.02.03.2020.

------

ஆணை:

- சேலம் மாவட்டம், எருமாபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 10.05.2006 அன்று இயற்கை எய்திய திரு.ஆ.ராசன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.ரா.கிரிதரன் என்பாருக்கு பார்வை–5ல் காணும் சேலம் மாவட்டக் கல்வி அலுவலர் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு, தனியர் ஆத்தூர் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 02.09.2016 மு.ப. பணியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

2) கருணை அடிப்படையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரையுள்ள காலத்தில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை படுத்துதல் சார்ந்து பார்வை–2 இல் காணும் அரசாணையின் பத்தி 5.1 மற்றும் 5.2 இல் கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும்.

(5.2) மேலே பத்தி 5.1 ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

3) திரு.ரா.கிரிதரன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வது சார்பாக பார்வை–6 மற்றும் 7ன்படி பெறப்பட்ட கருத்துருக்கள் மேற்காணும் அரசாணை மற்றும் பார்வை–3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டது.

4) இதன்படி, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை–2 இல் காணும் அரசாணையின்படியும், பார்வை–4ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படியும், பார்வை–7 மற்றும் 8 இல் காணும் ஆத்தூர் மாவட்டக் கல்வி அலுவலர் பரிந்துரையின் பேரிலும் கீழ்க்காண் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளரின் பெயருக்கெதிரில் கலம் (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர்/பதவி/பணிபுரியும் பள்ளி/அலுவலகம் திரு/திருமதி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.ரா.கிரிதரன்,<br>இளநிலை உதவியாளர்,<br>வட்டாரக் கல்வி அலுவலகம், ஆத்தூர்.<br>சேலம் மாவட்டம். | 02.09.2016 முற்பகல் | 02.09.2016 முற்பகல் |

**நிபந்தனைகள்:**

1. பணிவரன்முறை செய்த விவரம் குறித்து பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. பணியினை வரன்முறை செய்யப்பட்டமைக்கு அரசளவில் பதிவு செய்ய நடைமுறையிலுள்ள சரிபார்ப்பு பட்டியலின்படி கருத்துருக்கள் அசல் மற்றும் நகல்கள் மற்றும் இந்த பணிவரன்முறை ஆணை நகல் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பக்க நகல் ஆகியவற்றுடன் அனுப்பிவைக்க வேண்டும்.
3. தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 32எ(1)-ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும்.
4. தகுதிகாண் பருவ காலத்தில் இரண்டாண்டுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.
5. தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்.

21.01.2022

இணைப்பு:

பணிப்பதிவேடு, மற்றும் அசல் சான்றுகள்.

பெறுநர்:

சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக).

நகல்: வட்டாரக் கல்வி அலுவலர், ஆத்தூர்.

நகல்: மாவட்டக் கல்வி அலுவலர், ஆத்தூர்.

நகல்: சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.